# புலம்பெயர்ந்து வாழும் தமிழர்கள் குறித்த முதல் அனைத்துலக மாநாடு

## மொரிசியசு

## (ஜூலை 23, 24, 25 - 2014)

புலம்பெயர்ந்து வாழும் தமிழர்கள் குறித்த முதல் அனைத்துலக மாநாடு மொரிசியசு நாட்டிலுள்ள மகாத்மா காந்தி நிறுவன வளாகத்தில் வரும் ஜூலை 16, 17, 18 - 2014 ஆகிய நாட்களில் நடைபெறவுள்ளது. இம்மாநாட்டினை சென்னையிலுள்ள **ஆசியவியல் நிறுவனமும், மொரிசியசு நாட்டின் மகாத்மா காந்தி நிறுவனமும், மொரிசியசு நாட்டின் பல்வேறு தமிழமைப்புக்களும்** இணைந்து நடத்துகின்றன.

ஏறத்தாழ 60-க்கும் மேற்பட்ட நாடுகளில் தமிழர்கள் புலம்பெயர்ந்து வாழ்கின்றனர் இந்தக் குடியேற்றம் பல்வேறு காலகட்டங்களில் ஏற்பட்டதாகத் தெரிகின்றது. தொல் பழங்காலத்தில் வணிக உறவு காரணமாகத் தமிழர்களின் குடியேற்றம் பல்வேறு நாடுகளில் ஏற்பட்டுள்ளது. இடைக்காலத்தில் தென்கிழக்காசிய நாடுகளில் சோழ மன்னர்கள் மேற்கொண்ட படையெடுப்பைத் தொடர்ந்து தமிழர்களின் குடியேற்றம் பல்வேறு ஆசிய நாடுகளில் பல்வேறு காலகட்டங்களில் ஏற்பட்டது.

கூலித்தொழிலாளர்களாக இந்துமாக்கடல் தீவுகளுக்கும், ∴பிஜி போன்ற பசிபிக் தீவுகளுக்கும் ஏறத்தாழ 250 ஆண்டுகளுக்கு முன்னர் தமிழர்கள் பெருவாரியாகப் புலம்பெயர்ந்துள்ளனர்.

தற்போது கல்வி, வேலை, ஆய்வு, வணிபம் போன்ற பல்வேறு அடிப்படைக் காரணங்களுக்காக அமெரிக்கா, வளைகுடா நாடுகள், தென்கொரியா, ஜப்பான் போன்ற பல்வேறு நாடுகளுக்கும் புலம்பெயர்ந்து செல்கின்றனர்.

இவ்வாறு புலம்பெயர்ந்து சென்ற தமிழர்களின் வாழ்வியல் நிலை, பண்பாட்டுக் கூறுகள் ஆகியன புலம்பெயர்ந்து சென்ற பிறநாடுகளில் பிற இன, பண்பாட்டுச் சார்புடைய மக்கள் மத்தியில் எவ்வாறு உள்ளன என்பதை விரிவாக விவாதிக்கும் நோக்கிலும், தாய்த் தமிழகத்தோடு அவர்களுக்குள்ள தொடர்பு துண்டிக்கப்படாது தொடரும் வகையிலும் இவற்றைப் பதிவு செய்து ஆராயும் குறிக்கோளுடனும் மேற்கூறிய அனைத்துலக மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதில் புலம்பெயர்ந்து சென்ற தமிழர்களின் சார்பில் ஒரு நாட்டிற்குக் குறைந்தபட்சமாக ஓரிரு அறிஞர்கள் கலந்து கொண்டு வரையறுக்கப்பட்ட விரிவான தகவல்களுடன் ஆய்வுரைகள் வழங்கவிருக்கின்றனர். இம்மாநாட்டின் மூலம் புலம்பெயர்ந்து சென்ற தமிழர்கள் குறித்தும் பிற நாடுகளில் இவர்கள் பரப்பிய தமிழ்ப்பண்பாடு குறித்தும், தமிழ்ப்பண்பாட்டினைப் புலம்பெயர்ந்து சென்ற நாடுகளில் தக்கவைத்துக் கொள்ள இவர்கள் மேற்கொள்ளும் முயற்சிகள் பற்றியும் கிடைக்கும்

அனைத்துத் தகவல்களும் திரட்டப்படும். அறிஞர்களோடு பார்வையாளர்களும் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளிலிருந்து பெருவாரியாக பங்கேற்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

மூன்று நாட்கள் தொடர்ந்து நடைபெறும் இம்மாநாட்டின் கருத்தரங்கில் நாளொன்றிற்கு குறைந்தபட்சம் 30 கட்டுரைகள் வரை அரங்கேற உள்ளன. கீழ்க்கண்ட நாடுகளின் பிரதிநிதிகள் இம்மாநாட்டில் பங்கேற்க உள்ளனர்.

## பங்கேற்கும் நாடுகள், நாட்டுப்பகுதிகள்

| | | |
|---|---|---|
| இந்தியா | பிரான்சு | தைவான் |
| இலங்கை | ஜெர்மனி | சீனா |
| சீசில்ஸ் | கொரியா | செக் |
| மொரிசியசு | ஜப்பான் | கதார் |
| ரீயூனியன் | பிலிப்பைன்ஸ் | அபுதாபி |
| ஃபிஜி | நார்வே | துபாய் |
| மால்தீவு | போலந்து | குவைத் |
| இந்தோனேசியா | இத்தாலி | சௌதி அரேபியா |
| ஜாவா | போர்த்துக்கல் | சூடான் |
| சுமத்திரா | ஸ்பெயின் | பூர்னியோ |
| பாலி | ஆஸ்திரியா | ஷார்ஜா |
| சிங்கப்பூர் | ஹங்கேரி | துருக்கிஸ்தான் |
| மலேசியா | தென்அமெரிக்கா | ஆப்கானிஸ்தான் |
| தென்னாப்பிரிக்கா | வடஅமெரிக்கா | ஆஸ்திரேலியா |
| ட்ரினிடாட், தபாகோ | கானடா | எத்தியோப்பியா |
| கம்போடியா | ஜோர்டான் | சுவீட்சர்லாந்து |
| தாய்லாந்து | இஸ்ரேல் | நெதர்லாந்து |
| பர்மா | சிரியா, லெபனான் | டென்மார்க் |
| வியட்நாம் | ஈரான் | ஹவ்வாய் |
| சுவீடன் | ஈராக் | நைஜீரியா |
| பிரிட்டன் | ரஷியா | அந்தமான் நிகோபர் தீவுகள் |
| ஸ்காட்லாந்து | ஹாங்காங் | |

## மாநாட்டுப் பயன்கள்

1. உலகெங்கிலும் புலம்பெயர்ந்து வாழும் ஏறத்தாழ 1.5 கோடி தமிழர்கள் தாய்த் தமிழகத்தோடு தங்களுக்குள்ள உறவை வலுப்படுத்தவும் தாய்த்தமிழகத்தின் நல்ல பணிகளில் பங்கேற்கவும் இம்மாநாட்டின் மூலம் வழிபிறக்கும்.

2. பொருளாதாரநிலையில் உயர்ச்சி பெற்றுள்ள இவர்கள் தாய்த்தமிழகத்தில் முதலீடுகளைச் செய்து தமிழக வளர்ச்சிக்கும் தங்களின் வாழ்வியல் மேம்பாட்டிற்கும் துணைபுரிய இது வாய்ப்பாக அமையலாம்.

3. புலம்பெயர்ந்து வாழும் தமழர்கள் தமிழகம் வந்துபோகும் நிலை பெருகும்போது தமிழகச் சுற்றுலா தழைக்கும்.

4. தமிழையும் தமிழ்ப்பண்பாட்டையும் மறந்துபோன பெரும்பான்மையான இவர்கட்கு தமிழ்க்கல்வி நல்கி கடல்கடந்த நாடுகளில் தமிழக அரசு மேற்கொள்ளவிருக்கும் தமிழ்வளர்ச்சி தொடர்பான திட்டப்பணிகளில் இவர்கள் நல்ல பங்களிப்புக்களை நல்க வாய்ப்புப் பிறக்கும்.

மொரிசியசு நாட்டின் முன்னாள் கல்வியமைச்சரும், உலக வங்கியின் (World Bank) மூத்த ஆலோசகரும், யுனெஸ்கோ நிறுவனத்தின் இயக்குநருமான **பேராசிரியர் ஆறுமுகம் பரசுராமன்** அவர்கள் மாநாட்டு அமைப்புக் குழுவின் தலைவராக உள்ளார்.

இம்மாநாடு தொடர்பான தகவல்களை அறிந்து கொள்ளவும், மாநாட்டில் கலந்து கொள்ள விரும்புவோர் தம் பெயர்களைப் பதிவு செய்யவும் மாநாட்டு வலைத்தளத்தோடு (www.tamil-diaspora.org) தொடர்பு கொள்ளலாம்.

தொடர்பு முகவரி:


முனைவர் ஜி. ஜான்சாமுவேல்
இயக்குநர்
ஆசியவியல் நிறுவனம்
செம்மஞ்சேரி, சோழிங்கநல்லூர் அஞ்சல்
சென்னை-600119
தொலைபேசி: 044-24501851
கைபேசி: 9840526834
மின்னஞ்சல்: ias@xlweb.com
இணையதளம்: http://xlweb.com/heritage/asian